## ஒரு பார்வை - பகுதி 1

**பெற்றோரிடம் கருணையுடன் நடந்துகொள்பவர்களுக்கு நன்மைகளும், பெற்றோரை அவமதிப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் தெளிவாக கூறப்பட்டுள்ளது. 40 வயதை அடையும் போது கேட்கவேண்டிய துவா கொடுக்கப்பட்டுள்ளது. அஹ்காஃப் (நபி ஹூத்) மக்களின் அழிவு பற்றி நினைவூட்டப்படுகிறது. நபி (ஸல்) அவர்கள் குர்ஆன் ஓதிக் கொண்டிருந்ததைக் கேட்ட ஜின்கள், தம் சமூகத்தாருக்கு எச்சரிக்கை செய்வதற்காக திரும்பிச் சென்ற நிகழ்வு பற்றி கூறப்பட்டுள்ளது.**

## தராவிஹ் - 22: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 46, அல்அஹ்காஃப்; வசனம்: 1 - 35; பிரிவு: 1 - 4

1. **ஹா மீம்! இந்த குர்ஆன் வல்லமை மிக்க, ஞானம் நிறைந்த அல்லாஹ்விடமிருந்தே இறக்கி அருளப்பட்டுள்ளது. (ஸூரா - அல்அஹ்காஃப்; பிரிவு: 1)**

2. **‘இவ்வேதத்தை, நபிதான் சுயமாக புனைந்துள்ளார்’ என்று இறைமறுப்பாளர்கள் கூறுகிறீர்களா? (ஸூரா - அல்அஹ்காஃப்; பிரிவு: 1)**

3. **நபியே! நீங்கள் அவர்களிடம் கூறுங்கள்: “நான் இதை சுயமாக புனைந்திருந்தால், அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து என்னைத் துளியளவும் உங்களால் காப்பாற்றமுடியாது. நீங்கள் இதைப் பற்றி என்னென்ன கூறுறீர்களோ, அதை அவன் நன்கறிந்தவன். எனக்கும் உங்களுக்கும் இடையே சாட்சியாக இருக்க அவனே போதுமானவன்”. (ஸூரா - அல்அஹ்காஃப்; பிரிவு: 1)**

4. குர்ஆனாகிய இவ்வேதம் அரபி மொழியில் இறக்கப்பட்டுள்ளது. இது அநியாயம் செய்வோரை அச்சமூட்டி எச்சரிப்பதற்காகவும், நன்மை செய்பவர்களுக்கு நற்செய்தி சொல்லவும் அருளப்பட்டுள்ளது. (ஸூரா - அல்அஹ்கா:ஃப்; பிரிவு: 2)

5. பெற்றோர்களை அழகிய முறையில் நடத்துமாறு அல்லாஹ் மக்களை உபதேசிக்கின்றான். (ஸூரா - அல்அஹ்கா:ஃப்; பிரிவு: 2)

6. அவனுடைய தாய் சிரமத்துடன் அவனைச் சுமந்தாள். சிரமத்துடனேயே அவனைப் பெற்றெடுத்திருக்கிறாள். (ஸூரா - அல்அஹ்கா:ஃப்; பிரிவு: 2)

7. அவனைச் சுமப்பது முதல் பால் குடி மறக்கச் செய்வது வரை மொத்தம் முப்பது மாதங்களாகும். (கர்ப்பத்தில் குறைந்தது 6 மாதங்கள் சுமக்கிறாள். அதிகபட்சமாக 24 மாதங்கள் பாலூட்டி வளர்கிறாள்). (ஸூரா - அல்அஹ்கா:ஃப்; பிரிவு: 2)

8. இறுதியில் அவன் தனது முழுபலத்தை அடைந்து அவனுக்கு நாற்பது வயது ஆகும்போது கூறுவான்: (ஸூரா - அல்அஹ்கா:ஃப்; பிரிவு: 2)

9. “இறைவனே! நீ என் மீதும், என் பெற்றோர்கள் மீதும் புரிந்த அருட்கொடைகளுக்காக நன்றி செலுத்தவும், நீ திருப்தியுறும் நல்ல அமல்களை நான் செய்யவும் எனக்கு வாய்ப்பு அளிப்பாயாக! என்னுடைய சந்ததியையும் நல்லது செய்பவர்களாக ஆக்கியருள்வாயாக! நிச்சயமாக நான் உன்பக்கமே திரும்புகிறேன். உனக்கு முற்றிலும் வழிப்பட்ட முஸ்லிமாக நான் இருக்கின்றேன்” என்று கூறுவான். (ஸூரா - அல்அஹ்கா:ஃப்; பிரிவு: 2)

10. அவர்கள் செய்த நன்மையானவற்றை அல்லாஹ் ஏற்றுக்கொண்டு அவர்களின் தீமைகளை தள்ளுபடி செய்து, அவர்களை சுவர்க்கத்தில் வாழச் செய்வான். (ஸூரா - அல்அஹ்கா:ஃப்; பிரிவு: 2)

11. ஆனால் ஒருவன், தன் பெற்றோரைப் பார்த்து, "சீச்சீ!, மறுமையில் நான் உயிர்ப்பித்து எழுப்பப்படுவேன் என்று நீங்கள் என்னைப் பயமுறுத்துகிறீர்களா? நிச்சயமாக எனக்கு முன்னர் எத்தனையோ தலைமுறையினர் சென்று விட்டனரே! (அவர்கள் எழுப்பப்படவில்லையா?)", எனக் கேட்பான். (ஸூரா - அல்அஹ்கா:ஃப்; பிரிவு: 2)

12. அவ்விருவரும் அவனுக்காக அல்லாஹ்விடம் உதவி வேண்டுகின்றனர். அவர்கள் மகனைப் பார்த்து, "உனக்கு என்ன கேடு? நீ ஈமான் கொண்டுவிடு. நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்குறுதி மெய்யானது" என்கின்றனர். ஆனால் அவன், "இவையெல்லாம் முன்னுள்ளவர்களின் கட்டுக்கதைகளே" எனக்கூறி அவர்களின் உபதேசத்தை ஏற்க மறுத்து விடுகின்றான். (ஸூரா - அல்அஹ்கா:ஃப்; பிரிவு: 2)

13. இத்தகையோருக்கு கடும் தீர்ப்பு காத்திருக்கிறது. மேலும் அவர்கள், நஷ்டவாளிகளாவார்கள். (ஸூரா - அல்அஹ்கா:ஃப்; பிரிவு: 2)

14. ஹூத் (அலை) அவர்கள், மணல் மேட்டில் (மலைகளைக் குடைந்து கட்டப்பட்ட வீட்டில்) வசித்த தன்னுடைய மக்களை அல்லாஹ் ஒருவனையே வணங்குமாறும், மறுமையின் வேதனை குறித்தும் எச்சரித்துக் கொண்டிருந்தார்கள். (ஸூரா - அல்அஹ்கா:ஃப்; பிரிவு: 3)

15. ஆனால் அம்மக்கள், ஹூத் (அலை) அவர்களிடம் "நீர் உண்மையாளராக இருந்தால், நீர் எங்களை பயமுறுத்திய

அந்த வேதனையை எங்களிடம் கொண்டு வாரும்” என்றனர். (ஸூரா - அல்அஹ்கா:ப்; பிரிவு: 3)

16. அவர்கள் மேகத்தைப் பார்த்து மழை வரப்போகிறது என நினைத்தனர். ஆனால் மேகத்தின் வடிவத்தில் தண்டனை வந்தது. புயல்காற்றாக உருவெடுத்து அனைத்துப் பொருட்களையும் அழித்து விட்டது. (ஸூரா - அல்அஹ்கா:ப்; பிரிவு: 3)

17. நபி (ஸல்) அவர்கள் குர்ஆன் ஓதிக் கொண்டிருந்த வேளையில், ஜின்னுடைய ஒரு குழுவினரை அவர்களிடம் அல்லாஹ் அனுப்பினான். அவைகள் குர்ஆன் ஓதுவதை கேட்டபோது, அமைதியாக இருக்குமாறு ஒருவர் மற்றொருவரிடம் கூறின. (ஸூரா - அல்அஹ்கா:ப்; பிரிவு: 4)

18. ஓதி முடிக்கப்பட்ட போது, தம் சமூகத்தாருக்கு எச்சரிக்கை செய்வதற்காக அந்த ஜின்கள், திரும்பிச் சென்றனர். (ஸூரா - அல்அஹ்கா:ப்; பிரிவு: 4)

19. (ஜின்கள்) கூறினார்கள்: “எம் சமூகத்தார்களே! நிச்சயமாக மூஸாவுக்குப் பின்னர் இறக்கப்பட்டிருக்கின்ற ஒரு வேதத்தை நாங்கள் செவிமடுத்தோம். அது தனக்கு முன்னுள்ள வேதங்களை உண்மைப் படுத்துகிறது. அது உண்மைக்கு வழிகாட்டுகின்றது; நேரான மார்க்கத்தைக் காட்டுகின்றது. எம் சமூகத்தார்களே! அல்லாஹ்வின் அழைப்பாளருக்கு பதிலளியுங்கள். (அவர் கூறுவதை ஏற்று) அவர் மீது ஈமான் கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களுக்கு மன்னிப்பளிப்பான். நோவினை தரும் வேதனையிலிருந்து உங்களைப் பாதுகாப்பான்”. (ஸூரா - அல்அஹ்கா:ப்; பிரிவு: 4)

20. “ஆனால், யார் அல்லாஹ்வின் அழைப்பாளருக்குப் பதிலளிக்கவில்லையோ, அவரால் பூமியில் (அல்லாஹ்வை)

செயலிழக்கச் செய்ய முடியாது. அவனையன்றி அவருக்கு பாதுகாவலர் யாருமில்லை. அத்தகையவர்கள் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருக்கின்றார்கள்". (ஸூரா - அல்அஹ்கா.ஃப்; பிரிவு: 4)

## ஒரு பார்வை - பகுதி 2

நிராகரிப்பவர்களுடன் போரிடுவதன் மூலம் அல்லாஹ் உங்களில் சிலரை, சிலரைக் கொண்டு சோதிக்கின்றான். சொர்க்கத்தைப் பற்றிய அழகான வர்ணனைகள் கொடுக்கப்பட்டுள்ளது. சில முஸ்லிம்கள் சண்டையிடுவதற்கான கட்டளையை ஒரு ஸூராவின் மூலம் கேட்கிறார்கள். ஆனால் அவர்களைப் போரிடச் சொல்லும் ஸூரா வெளிப்பட்டால், அவர்கள் பயத்திலும், சந்தேகத்திலும் உள்ளனர். அவர்கள் கீழ்ப்படிவதுபோல நன்றாக பேசுவார்கள். ஆனால் அவர்களின் செயல்கள் எதிர்மறையாக இருக்கும். இத்தகையோர்களுக்கு அல்லாஹ்வின் சாபம் உண்டாகும்.

## தராவிஹ் - 22: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 47, முஹம்மது; வசனம்: 1 - 38; பிரிவு: 1 - 4

1. யார் அல்லாஹ்வை நிராகரித்தும், அவன் பாதையை விட்டு மனிதர்களைத் தடுத்தும் கொண்டிருந்தார்களோ, அவர்களுடைய செயல்களை (அல்லாஹ்) பயனில்லாமல் ஆக்கிவிட்டான். (ஸூரா - முஹம்மது; பிரிவு: 1)

2. யார் ஈமான் கொண்டு, ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்து, நபி (ஸல்) மீது இறக்கி அருளப்பட்ட வேதத்தை, 'இது அவர்களுடைய இறைவனிடமிருந்து வந்துள்ள உண்மையாகும்' என்று நம்பிக்கை கொள்கிறார்களோ, அவர்களுடைய தீமைகளை அவன் அகற்றுவான். அவர்களுடைய நிலையை சீராக்குவான். (ஸூரா - முஹம்மது; பிரிவு: 1)

3. முஃமின்களே! நிராகரிப்பவர்களை நீங்கள் போரில் சந்தித்தால், பிடரிகளை வெட்டுங்கள். பகைவர்கள் தங்கள் ஆயுதங்களைக் கீழே வைக்கும் வரையில் கடும் போர் செய்யுங்கள். போர் கைதிகளை பிடித்து, அவர்களது கட்டுகளை பலப்படுத்தி விடுங்கள். (ஸூரா - முஹம்மது; பிரிவு: 1)

4. அல்லாஹ் நாடியிருந்தால் போரின்றி அவனே அவர்களை பழிவாங்கியிருப்பான். ஆயினும், (போரின் மூலம்) அவன் உங்களில் சிலரை, சிலரைக் கொண்டு சோதிக்கின்றான். (ஸூரா - முஹம்மது; பிரிவு: 1)

5. அல்லாஹ்வின் பாதையில், யார் கொல்லப்படுகிறார்களோ அவர்களுடைய (நற்)செயல்களை ஒருபோதும் அவன் பாழாக்கி விடமாட்டான். (ஸூரா - முஹம்மது; பிரிவு: 1)

6. இறைநம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு நீங்கள் உதவி செய்தால், அவன் உங்களுக்கு உதவி செய்வான்; உங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவான் (ஸூரா - முஹம்மது; பிரிவு: 1) (ஸூரா - முஹம்மது; பிரிவு: 1)

7. பயபக்தியுடையவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள சுவர்க்கத்தின் தன்மைகள் கூறப்பட்டுள்ளது. (ஸூரா - முஹம்மது; பிரிவு: 2)

8. அதில் மாறுபடாத தெளிந்த நீரைக் கொண்ட ஆறுகளும், சுவை மாறாத பாலாறுகளும், அருந்துவோருக்கு இன்பமளிக்கும் மது ஆறுகளும், தெளிவான தேன் ஆறுகளும் இருக்கின்றன. இன்னும், அதில் அவர்களுக்கு எல்லா விதமான கனிவகைகளும், தங்கள் இறைவனின் மன்னிப்பும் கிடைக்கும். (ஸூரா - முஹம்மது; பிரிவு: 2)

9. (இத்தகைய சுவர்க்கவாசி) நரகவாசிக்கு ஒப்பாவாரா? நரகத்தில் என்றென்றும் தங்கியிருப்பவர்களுக்கு, கொதிநீர் புகட்டப்பட்டு, குடல்களெல்லாம் துண்டு துண்டாகிவிடும். (ஸூரா - முஹம்மது; பிரிவு: 2)

10. இறைநம்பிக்கை கொண்டவர்கள் கூறுகிறார்கள்: “(புனிதப் போர் பற்றி) ஓர் அத்தியாயம் அருளப்படக்கூடாதா?” என்று. (ஸூரா - முஹம்மது; பிரிவு: 3)

11. ஆனால் உறுதிவாய்ந்த ஓர் அத்தியாயம் இறக்கப்பட்டு அதில் போர் புரியுமாறு கூறப்பட்டால், யாருடைய இருதயங்களில் (நயவஞ்சக) நோய் இருக்கிறதோ, அவர்கள் மரண பயத்தினால், மயக்கமுற்றவன் பார்ப்பதைப் போல் உம்மை பார்ப்பதை நீர் காண்பீர்! ஆகவே, இத்தகையவர்களுக்குக் கேடு தான். (ஸூரா - முஹம்மது; பிரிவு: 3)

12. அவர்களுடைய நாக்கு கீழ்ப்படிவதுபோல நன்றாக பேசும் (ஆனால் அவர்கள் செயல் எதிர்மறையாக இருக்கும்). (ஸூரா - முஹம்மது; பிரிவு: 3)

13. இத்தகையோரைத் தான் அல்லாஹ் சபித்து, செவிடாக்கி, இவர்கள் பார்வைகளையும் குருடாக்கி விட்டான். (ஸூரா - முஹம்மது; பிரிவு: 3)

14. நிச்சயமாக நாம் உங்களைச் சோதனைக்கு உள்ளாக்குவோம். எதற்கெனில், உங்களிலுள்ள போராளிகளையும், பொறுமையாளர்களையும் நாம் கண்டறிவதற்காக. உங்கள் வார்த்தைகளையும், செயல்களையும் அவற்றின் உண்மையை வெளிப்படுத்துவதற்காக நாம் சோதிப்போம். (ஸூரா - முஹம்மது; பிரிவு: 4)

15. விசுவாசிகளே!, அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடந்து கொள்ளுங்கள். உங்களுடைய செயல்களை நீங்கள் வீணாக்கி விட வேண்டாம். (ஸூரா - முஹம்மது; பிரிவு: 4)

16. (சத்தியத்தை) நீங்கள் புறக்கணித்தால், உங்களுக்குப் பதிலாக (வேறு ஒரு) சமூகத்தாரை அவன் கொண்டு வருவான். அவர்கள் உங்களைப் போன்று இருக்கமாட்டார்கள். (ஸூரா - முஹம்மது; பிரிவு: 4)

## <u>ஒரு பார்வை - பகுதி 3</u>

**ஸூரா அல்ஃபத்ஹ் மற்றும் அதன் பின்னணி பற்றிய விளக்கங்கள், ஹுதைபியா ஒப்பந்தம் மற்றும் அதன் பின்விளைவுகள் பற்றி விவாதிக்கிறது.**

# <u>தராவிஹ் - 22: (ரக்அத் 9 முதல் 12)</u>

## <u>ஸூரா - 48, அல்ஃபத்ஹ்; வசனம்: 1 - 29; பிரிவு: 1 - 4</u>

**<u>ஸூரா ஃபத்ஹினுடைய பின்னணி</u>:**

**இந்த ஸூராவை மேலும் விளங்கிக் கொள்வதற்கு இந்த பின்னணி துணை புரியும். மக்கத்து காஃபிர்களுக்கு மத்தியில் ஹுதைபிய்யா உடன்படிக்கை ஏற்பட்டு முடிந்த பிறகு, மக்காவிலிருந்து மதீனாவிற்குச் செல்லும் வழியில் ஹிஜ்ரி 6ஆம் ஆண்டு இந்த ஸூரா இறக்கப்பட்டது. முஸ்லிம்கள் உம்ரா செய்வதற்காக புறப்பட்டு மக்காவிற்கு அருகிலுள்ள ஹுதைபிய்யா என்ற கணவாய்க்கருகில் வந்தடைந்தபோது மக்கத்துக் குரைஷிகளால் தடுத்து நிறுத்தப்பட்டனர். ஹுதைபிய்யாவில் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த சமயம் நபி (ஸல்) அவர்கள் உஸ்மான் (ரலி) அவர்களை மக்காவிற்கு அனுப்பி “நாங்கள் உம்ரா செய்வதற்காகத்தான் வந்துள்ளோம்; போர் புரியும் நோக்கத்தோடு அல்ல” என்ற செய்தியை ஊர்த்தலைவர்களிடம் தெரிவித்துவிட்டு வருமாறு அனுப்பி வைத்தார்கள்.**

**உஸ்மான் (ரலி) அவர்கள் குறித்த நேரத்தில் திரும்பி வராதபோது ‘அவர் கொல்லப்பட்டு விட்டார்’ என்ற வதந்தி பரவியது. உடனே நபி (ஸல்) அவர்கள் உயிர் நீங்கும் வரை அவர்களிடம் போராடிட வேண்டுமென ஸஹாபாக்களை உறுதிமொழி எடுக்க அழைத்தார்கள். நபியும் ஸஹாபாக்களும் எடுக்கின்ற உறுதிமொழி சாதாரணமானது அல்ல என்று நினைத்த மக்காவாசிகள், ஆயுதம் தரித்து படையினரோடு முன்னால் வந்து நின்றனர். முஸ்லிம்களிடம் எந்த ஆயுதமுமில்லை. அவர்கள் அனைவரும் இஹ்ராமுடைய**

ஆடையில் இருந்தனர். ஆனால் அந்த வதந்தி உண்மையல்ல என்று நிரூபனமானபோது போர்புரிவது கைவிடப்பட்டது. உஸ்மான் (ரலி) அவர்கள் பத்திரமாக திரும்பிவந்தார்கள். அவர்களுடன் குரைஷியர்களின் பிரதிநிதியாக ஸுஹைல் பின் அம்ர் என்பவர் நபி (ஸல்) அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வந்தார். குரைஷிகளுக்கு மத்தியில் நடைபெற்ற உடன்படிக்கையில், முஸ்லிம்கள் இப்போது திரும்பிச் சென்று விட்டு அடுத்த வருடம் மக்காவிற்கு வரவேண்டும் என்றிருந்தது. இனி 10 ஆண்டுகளுக்கு அவர்களுக்கு மத்தியில் எந்த போரும், சண்டை சச்சரவுமில்லை என்றும், எந்த அரபினமும் குரைஷிகளிடமோ அல்லது முஸ்லிம்களிடமோ சேர்ந்து கொள்ளலாம். அதுபோக, இந்த ஒப்பந்தத்திலும் பங்கெடுத்துக் கொள்ளலாம். குரைஷிகளிடமிருந்து முஸ்லிம்களின் கூடாரத்திற்கு யாராவது மாறிவிட்டால் அவர்களைத் திருப்பி அனுப்பி விடவேண்டும். முஸ்லிம்களில் யாராவது குரைஷிகளிடம் வந்து சேர்ந்தால் திருப்பி அனுப்பப்படாது என்று ஒப்பந்தமிருந்தது.

நபி (ஸல்) அவர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டபோது முஸ்லிம்கள் அதிருப்தியிலிருந்தனர். குரைஷியர்கள் இந்த உடன்படிக்கை அவர்களுக்கு பெரும்வெற்றி எனக் கருதினர். நபி (ஸல்) அவர்கள் தங்கள் சஹாபாக்களிடம் ஹுதைபிய்யா கணவாய்க்கருகிலேயே குர்பானி கொடுத்துவிட்டு, தலைமுடியை வெட்டிவிட்டு இஹ்ராம் உடையை கலையக்கூறியபோது, அவர்கள் எதுவும் செய்யவில்லை. நபிகளார் மூன்று முறை கூறியும் அவர்கள் அதை செய்யவில்லை. சஹாபாக்கள் இந்த ஹுதைபிய்யா உடன்படிக்கையை கேட்டுவிட்டு அதிர்ச்சியும், மனஉளைச்சலும் அடைந்ததே அதற்கு காரணம்.

நபி (ஸல்) அவர்கள் வாழ்நாளில் ஸஹாபாக்கள் அவர்களது பேச்சை கேட்காமல் இருந்ததாக எந்த நிகழ்வும் இருந்ததில்லை. ஆதலால், நபியவர்கள் கவலையுற்றார்கள். தமது கவலையை தனது மனைவி உம்மு ஸலமா (ரலி) அவர்களிடம் தெரிவித்தார்கள். அதற்கு உம்மு ஸலாமா (ரலி) நபிகளாரிடம், "நீங்கள் முதலில் குர்பானி கொடுத்துவிட்டு, தலைமுடியை வெட்டிவிட்டு, இஹ்ராம் உடையை கலையுங்கள். மற்றவர்கள் தானாக அதை பின்பற்றுவார்கள்" என

யோசனை கூறினார்கள். அதன்படியே நடந்தது. ஸஹாபாக்களுக்கும் உடன்படிக்கையை மாற்றமுடியாது என தெரிந்தும் விட்டது. இருந்தாலும், அவர்கள் மனதிலிருந்த மனஉளைச்சல் மறையவில்லை.

இந்த ஒப்பந்தமானது மிகப்பெரும் வெற்றியை பிரதிபலிக்கின்ற வகையில் இருப்பதை தெளிவுபடுத்துகின்ற விதத்தில் மதீனாவுக்குச் செல்கின்ற வழியில் நபி (ஸல்) அவர்களுக்கு இந்த ஸூரா இறக்கியருளப்பட்டது. இந்த ஸூராவின் முக்கியத்துவத்தைப் பற்றி நபி (ஸல்) கூறுகையில், "இன்று எனக்கு கொடுக்கப்பட்டுள்ள இறைவசனங்கள், இந்த உலகம் மற்றும் அதிலுள்ள பொருட்களைவிட மேலானது" என்றார்கள். பின்பு இந்த ஸூராவை ஓதிக்காட்டினார்கள். ஸஹாபாக்கள் அனைவரும் மனமகிழ்ந்தனர். இந்த ஒப்பந்தத்தின் சாதகங்களை அவர்கள் ஒன்றன்பின் ஒன்றாக உணரத்தொடங்கினர். இந்த ஒப்பந்தம் ஒரு மிகப்பெரிய வெற்றி என அவர்களுக்குப் புரிந்தது. இந்த ஒப்பந்தத்தின் சில முக்கிய விதிகள்:

அரேபியாவில் இஸ்லாமிய ஆட்சி நடைமுறைக்கு வந்தது. பல்வேறு இனமக்களும் முஸ்லிம்களுடன் நல்உடன்படிக்கை செய்து கொள்ளலாம் என்ற விதியும் வகுக்கப்பட்டது.

குரைஷிகள், முஸ்லிம்கள் உம்ரா செய்வதை ஒப்புக்கொண்டு விட்டனர். காஃபிர்கள், முஸ்லிம்களின் மார்க்கத்திற்கெதிராக செய்கின்ற அனைத்து தவறான பிரச்சாரங்களையும் அகற்றப்பட்டது.

இனி 10 வருடங்களுக்கு போர் இல்லை என்றும் எந்த பயமுமின்றி இஸ்லாத்தினைப் பரப்புவதற்கு முஸ்லிம்களுக்கு உதவி புரிய வேண்டுமென சட்டம் இயற்றப்பட்டது. இதற்கு முன்னர் 5 வருடங்களில், முஸ்லிம்கள் குறைஷியர்களுடன் 3 பெரும் போர்களைச் சந்தித்திருந்தனர்: பத்ர் போர், உஹது போர், அகழிப் போர். இந்த உடன்படிக்கைக்குப்பின் 2 ஆண்டுகளில் இஸ்லாத்தைத் தழுவிய மக்களின் எண்ணிக்கை, கடந்த 19 ஆண்டுகளில் முஸ்லிமானவர்களின் எண்ணிக்கையை விட அதிகம்.

இந்த உடன்படிக்கையின் ஒரு அம்சம் ஸஹாபாக்களை மிகவும் உறுத்தியது. அதாவது, மக்காவிலிருந்து தப்பியோடி மதீனாவிற்கு

செல்பவர்கள் மீண்டும் மக்காவுக்கு திருப்பி அனுப்பப்பட வேண்டும். ஆனால், மதீனாவிலிருந்து தப்பியோடி மக்காவிற்குச் சென்றால் அவர்கள் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள். ஆனால் பின்னர் அதுவும் முஸ்லிம்களுக்கு சாதகமாக அமைந்தது. சில நாட்களில் மக்காவிலிருந்து அபுபஷீர் என்ற முஸ்லிம் மதீனாவிற்கு வந்து விட்டார். ஆனால், குரைஷிகள் அவரை திருப்பி அனுப்பக்கேட்டு, ஒருவரை அனுப்பி அவரை கைது செய்து கொண்டுவரச் செய்தனர். நபி (ஸல்) அவர்களும் ஒப்பந்தப்படி அவரை திருப்பி அனுப்பிவிட்டார்கள். ஆனால் அவரை மக்காவிற்கு கொண்டு வரும் வழியில், அவர் தப்பியோடிவிட்டார். அந்த வழி மக்காவிலிருந்து சிரியாவிற்கு வாணிபத்திற்காக செல்லும் வழி. பின்னர் பலரும் மக்காவிலிருந்து தப்பியோடி, அபுபஷீருடன் சேர்த்துக்கொண்டனர். இவ்வாறாக 70 பேர்கள் சேர்ந்து விட்டனர். அவர்கள் அவ்வழியில் செல்லும் மக்காவின் வணிக வாகனங்களை தாக்க ஆரம்பித்தனர். இதனால் ஏற்பட்ட இழப்பால், மக்கத்து குரைஷிகள் நபி (ஸல்) அவர்களிடம் அம்மக்களை திரும்ப அழைத்துக்கொள்ள மன்றாடினர். இதன்மூலம் ஒப்பந்தத்தின் அந்த அம்சம் குரைஷிகளுக்கு பயனில்லாமல் போய்விட்டது.

குரைஷிகளின் அத்துமீறல் இருந்த ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பிறகு இரண்டு வருடத்தில் அல்லாஹ் உதவி புரிந்தான். ஹுதைபிய்யா உடன்படிக்கையின் போது வெறும் 1400 பேருடன் இருந்த முஸ்லிம்கள், அதன் பிறகு இரண்டாண்டுகளில் நபி (ஸல்) அவர்கள் பத்தாயிரம் முஸ்லிம்களோடு மக்காவிற்குள் நுழைந்து வெற்றி வாகை சூடினார்கள். இந்த வெற்றியைத்தான் அல்லாஹ் இந்த ஸூராவில் குறிப்பிடுகிறான்.

1. நபியே! உமக்கு மகத்தான வெற்றியை நாம் வழங்கினோம். (ஹுதைபிய்யா ஒப்பந்த வடிவில்). (ஸூரா - அல்ஃபத்ஹ்; பிரிவு: 1)

2. நபியே! உம்மிடம் உறுதிமொழி எடுத்துக்கொண்டவர்கள், நிச்சயமாக அல்லாஹ்விடமே உறுதிமொழி எடுத்துக்கொண்டவர்கள் ஆவர். அவர்களுடைய கரங்களுக்கு

மேல் அல்லாஹ்வின் கரம் உள்ளது. (ஸூரா - அல்ஃபத்ஹ்; பிரிவு: 1)

3. (ஹுதைபியாவில் கலந்துகொண்ட முஸ்லிம்களே!) நீங்கள் (கைபர் போரில் கிடைத்த) போர்ச் செல்வங்களை எடுத்துக் கொள்வதற்காகச் சென்றால், (ஹுதைபிய்யாவுக்கு வராதவர்கள்), "நாங்களும் உங்களைப் பின்தொடர்ந்து வருகிறோம்" என்று கேட்பார்கள். (ஸூரா - அல்ஃபத்ஹ்; பிரிவு: 2)

*4. ஹுதைபிய்யாவிலிருந்து திரும்பிய பின் நபி (ஸல்) அவர்கள் கைபரிலுள்ள யூதர்களை எதிர்க்க நேரிட்டது. அப்போது ஹுதைபிய்யா பயணத்தில் வந்தவர்களை மட்டுமே இதற்கும் அழைத்து செல்ல நேரிட்டது.*

5. "நீங்கள் எங்களைப் பின்பற்றி வரவே வேண்டாம். இவ்வாறே அல்லாஹ் முன்பே கூறியிருக்கின்றான்" என்று (நபியே! அவர்களிடம்) நீர் சொல்லி விடுவீராக! (ஸூரா - அல்ஃபத்ஹ்; பிரிவு: 2)

6. நபியே! பின் தங்கிவிட்டவர்களிடம் கூறுவீராக!: "வலிமை மிக்க ஒரு சமூகத்தை (அதாவது பாரசீக மற்றும் பைஸாந்திய சமூகத்தை) எதிர்த்துப் போரிட நீங்கள் விரைவில் அழைக்கப்படுவீர்கள். அப்போது ஒன்று, அவர்களுடன் நீங்கள் போரிட வேண்டும்; அல்லது அவர்கள் உங்களிடம் சரணடைய வேண்டும். (ஸூரா - அல்ஃபத்ஹ்; பிரிவு: 2)

7. அவ்வாறு அழைக்கப்படும் போது நீங்கள் கீழ்ப்படிந்தால், அல்லாஹ் உங்களுக்கு அழகிய நற்கூலியை வழங்குவான். ஆனால் இதற்கு முன் நீங்கள் (ஹுதைபிய்யா பயணத்தில்) பின்னடைந்தது போல் (இப்பொழுதும்) நீங்கள்

பின்வாங்கினால், நோவினை தரும் வேதனையை அவன் உங்களுக்குக் கொடுப்பான்” (ஸூரா - அல்ஃபத்ஹ்; பிரிவு: 2)

8. நபியே! முஃமின்கள் (ஹுதைபிய்யாவில் உள்ள) அந்த மரத்தடியில் உம்மிடம் வாக்குறுதி செய்த போது, மெய்யாகவே அல்லாஹ் அவர்களைப் பொருந்தி (ஏற்றுக்) கொண்டான். (ஸூரா - அல்ஃபத்ஹ்; பிரிவு: 3)

9. அவர்களுடைய இதயங்களில் இருப்பதை அவன் அறிவான். எனவே, அவர்கள் மீது, அமைதியை அருளினான். அவர்களுக்கு சீக்கிரமாக (கைபர் போரில்) வெற்றியை அளித்தான். (ஸூரா - அல்ஃபத்ஹ்; பிரிவு: 3)

10. நிச்சயமாக அல்லாஹ், தன் தூதர் கண்ட கனவை உண்மையாகவே நனவாக்கி விட்டான். அல்லாஹ் நாடினால் நிச்சயமாக நீங்கள் மஸ்ஜிதுல் ஹராமிற்குள் (அடுத்த வருடம்) உம்ரா செய்வதற்காக, நிம்மதியடைந்தவர்களாக எந்த பயமுமின்றி உங்களுடைய தலைமுடியை மொட்டை அடித்தவர்களாகவும், கத்தரித்தவர்களாகவும் நுழைவீர்கள். ஆகவே, நீங்கள் அறியாதிருப்பதை அவன் அறிகிறான். (ஸூரா - அல்ஃபத்ஹ்; பிரிவு: 4)

11. முஹம்மது அல்லாஹ்வின் தூதர் ஆவார். அவருடன் இருப்போர் காஃபிர்களிடம் கண்டிப்பானவர்களாகவும், தங்களுக்கிடையே கருணையாளர்களாகவும் இருப்பார்கள். (ஸூரா - அல்ஃபத்ஹ்; பிரிவு: 4)

12. ருகூஃ செய்பவர்களாகவும், ஸஜ்தா செய்பவர்களாகவும், அல்லாஹ்விடமிருந்து கிருபையயும், பொருத்தத்தையும் தேடியவர்களாகவும் அவர்களை நீங்கள் காண்பீர்கள். ஸஜ்தா செய்வதினால் அவர்களுடைய முன்நெற்றியிலே

ஸஜ்தாவினுடைய அடையாளத்தைக் காண்பீர்கள். (ஸூரா - அல்ஃபத்ஹ்; பிரிவு: 4)

13. இதுவே தவ்ராத்திலுள்ள அவர்களின் உதாரணமாகும். இன்ஜீலிலுள்ள அவர்களின் உதாரணமாகும். (ஸூரா - அல்ஃபத்ஹ்; பிரிவு: 4)

14. யார் ஈமான் கொண்டு ஸாலிஹான நற்செயல்கள் செய்கிறார்களோ அவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும், மகத்தான கூலியையும் வாக்களிக்கின்றான். (ஸூரா - அல்ஃபத்ஹ்; பிரிவு: 4)

## **ஒரு பார்வை - பகுதி 4**

**விசுவாசிகள் நபி (ஸல்) அவர்களிடம் பேசும்போது தங்களது குரலை தாழ்த்தி, மிகுந்த மரியாதையுடன் பேசுமாறு ஸூரா அல்ஹுஜுராத் கட்டளையிடுகிறது. விசுவாசிகள் ஒருவருக்கொருவர் சகோதரர்கள்; எனவே உங்கள் சகோதரர்களுக்கிடையேயான சச்சரவுகளை சமரசம் செய்து கொண்டு, அல்லாஹ்வை பயந்து நடந்து கொள்ளுங்கள். விசுவாசிகளுக்கிடையே ஒருவருக்கொருவர் பழித்துக் கொள்ளாதீர்கள். சந்தேகங்களில் பெரும்பாலானவற்றை தவிர்த்து விடுங்கள். ஏனெனில், சில சந்தேகங்கள் பாவமானவை. வேவு பார்க்காதீர்கள். ஒருவர் மற்றொருவரைப்பற்றி புறம் பேச வேண்டாம்.**

## **தராவிஹ் - 22: (ரக்அத் 13 முதல் 16)**

### **ஸூரா - 49, அல்ஹுஜுராத்; வசனம்: 1 - 18; பிரிவு: 1 - 2**

1. **"இறைநம்பிக்கை கொண்டோர்களே! நீங்கள் உங்கள் குரல்களை நபியின் குரலுக்கு மேலே, உயர்த்தாதீர்கள். மேலும், உங்களில் சிலர் மற்ற சிலருடன் இரைந்து பேசுவதைப் போல், அவரிடம் நீங்கள் இரைந்து போசாதீர்கள்". அவ்வாறு பேசினால் உங்களுடைய நற்செயல்கள் அழிந்து போய் விடக்கூடும். (ஸூரா - அல்ஹுஜுராத்; பிரிவு: 1)**

2. **(நபியே!) நிச்சயமாக, யார் உம்மை அறைக்கு அப்பாலிருந்து உரத்த குரலில் அழைக்கிறார்களோ, அவர்களில் பெரும்பாலோர் விளங்கிக் கொள்ளாதவர்களே! (ஸூரா - அல்ஹுஜுராத்; பிரிவு: 1)**

3. **முஃமின்களில் இரு பிரிவினர் சண்டையிட்டுக் கொண்டால் அவர்களுக்கிடையே சமரசம் செய்து வையுங்கள். (ஸூரா - அல்ஹுஜுராத்; பிரிவு: 1)**

4. முஃமின்கள் அனைவருமே சகோதரர்கள். உங்களது சகோதரர்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துங்கள். அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். நீங்கள் கிருபை செய்யப்படலாம். (ஸூரா - அல்ஹுஜுராத்; பிரிவு: 1)

5. இறைநம்பிக்கை கொண்டோர்களே! எந்த ஆண் சமூகமும் இன்னொரு ஆண் சமூகத்தைச் சிறுமைப்படுத்த வேண்டாம். இவர்களைவிட அவர்கள் சிறந்தவர்களாக இருக்கக்கூடும். எந்த பெண் சமூகமும், இன்னொரு பெண் சமூகத்தைச் சிறுமைப்படுத்த வேண்டாம். இவர்களைவிட அவர்கள் சிறந்தவர்களாக இருக்கக்கூடும். (ஸூரா - அல்ஹுஜுராத்; பிரிவு: 2)

6. உங்களுக்கிடையே ஒருவருக்கொருவர் பழித்துக் கொள்ளாதீர்கள். பட்டப்பெயர் வைத்து அழைக்காதீர்கள். (ஸூரா - அல்ஹுஜுராத்; பிரிவு: 2)

7. முஃமின்களே! சந்தேகங்களில் பெரும்பாலானவற்றை தவிர்த்து விடுங்கள். ஏனெனில், சில சந்தேகங்கள் பாவமானவை. (ஸூரா - அல்ஹுஜுராத்; பிரிவு: 2)

8. வேவு பார்க்காதீர்கள். ஒருவர் மற்றொருவரைப்பற்றி புறம் பேச வேண்டாம். (எதைக் கேட்டால் அவர் விரும்ப மாட்டாரோ அப்படிப்பட்டவற்றைப் பேசுவது தான் புறம் பேசுதல்). (ஸூரா - அல்ஹுஜுராத்; பிரிவு: 2)

9. உங்களில் யாராவது இறந்த தன் சகோதரனின் மாமிசத்தை உண்ண விரும்புவாரா? (இல்லை!) அதை நீங்கள் வெறுப்பீர்கள்தானே? நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சயமாக பாவத்திலிருந்து மீள்வதை அல்லாஹ் ஏற்றுக் கொள்பவன்; மிக்க கிருபை செய்பவன். (ஸூரா - அல்ஹுஜுராத்; பிரிவு: 2)

10. மனிதர்களே! நிச்சயமாக உங்களை ஒரே ஆண், ஒரே பெண்ணிலிருந்தே நாம் படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அடையாளம் காண்பதற்காகவே, பல இனங்களாகவும் குலங்களாகவும் உங்களை ஆக்கினோம். (ஸூரா - அல்ஹுஜுராத்; பிரிவு: 2)

11. உங்களில் இறையச்சம் உடையவரே அல்லாஹ்விடம் மிகவும் கண்ணியத்துக்குரியவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிந்தவனாகவும், நுண்ணறிவாளனாகவும் இருக்கின்றான். (ஸூரா - அல்ஹுஜுராத்; பிரிவு: 2)

**ஸூரா - 50, காஃப்; வசனம்: 1 - 15; பிரிவு: 1**

12. காஃப்! இந்த குர்ஆன் மிகவும் புகழுக்குரியது. நபியே! உங்களை அல்லாஹ் எச்சரிக்கை செய்பவராக அனுப்பியுள்ளான். (ஸூரா - காஃப்; பிரிவு: 1)

# ஒரு பார்வை - பகுதி 5

உங்கள் எல்லா செயல்களையும் பதிவு செய்ய அல்லாஹ் மலக்குகளை எவ்வாறு நியமித்துள்ளான் என்பதை ஸூரா காஃப் விவரிக்கிறது. மேலும் தீர்ப்பு நாளில் அவர்கள் உங்கள் கணக்கை முன்வைக்க தயாராக இருப்பார்கள். இப்ராஹீம் (அலை) அவர்களின் மனைவிக்கு வயது முதிர்ந்த நிலையிலும், ஒரு மகனைப் பெறப்போகும் நற்செய்தியை கொண்டுவந்த கண்ணியமிக்க விருந்தினர்கள் பற்றிய வரலாற்றை ஸூரா அத்தரியாத் விளக்குகிறது.

## தராவிஹ் - 22: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 50, காஃப்; வசனம்: 16 - 45; பிரிவு: 2 - 3

1. அல்லாஹ் மனிதனைப் படைத்தான். மேலும் அவன் மனம் அவனிடம் என்ன பேசுகிறது என்பது பற்றியும் அறிவான். அல்லாஹ் அவனுடைய பிடரி நரம்பைவிட அவனுக்கு நெருக்கமாக இருக்கின்றான். (ஸூரா - காஃப்; பிரிவு: 2)

2. அல்லாஹ்வுடைய இந்த நேரடி அறிவாற்றல் போக, அல்லாஹ் மனிதனுக்கு வலது புறமும், இடது புறமும் இரண்டு மலக்குகளை அமர்த்தியிருக்கின்றான். (ஸூரா - காஃப்; பிரிவு: 2)

3. மனிதன் பேசக்கூடிய அனைத்து வார்த்தைகளும் கண்காணிப்பிலிருக்கின்ற அந்த மலக்குகளால் பதிவு செய்யப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. (ஸூரா - காஃப்; பிரிவு: 2)

4. மரணத்தின் கடும் நெருக்கடி சத்தியத்தைக் கொண்டு வந்தது. (அப்போது அவனிடம் உள்ள மலக்குகள்), "எதிலிருந்து நீ பயந்து ஓடுகிறாயோ, அதுதான் இந்நிலை" (என்று கூறுவார்கள்). (ஸூரா - காஃப்; பிரிவு: 2)

5. ஸூர் ஊதப்படும் நாளில் (மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்படும் போது) ஒவ்வொரு ஆன்மாவும் தன்னை அழைத்து வரும் மலக்கு, மற்றும் சாட்சியாளர் மலக்குடன் வரும். (ஸூரா - கா:ப்; பிரிவு: 2)

6. அப்போது அவனுடன் இருந்த மலக்கு, "இதோ (இம்மனிதனின் ஏடு) என்னிடம் தயாராக இருக்கிறது" என்று கூறுவார். (ஸூரா - கா:ப்; பிரிவு: 2)

7. முரண்டு பிடித்து நிராகரித்துக் கொண்டிருந்தவன், நன்மையைத் தடுத்துக் கொண்டிருந்தவன், மறுமையை பற்றி சந்தேகத்திலிருந்தவன், அல்லாஹ்வை தவிர பிற கடவுள்களை வணங்கியவன் ஆகியவர்களை நரகிலே போடுமாறு தீர்ப்பு கூறப்படும். (ஸூரா - கா:ப்; பிரிவு: 2)

8. அந்த நேரத்தில் கா:பிர்களின் கூட்டாளியான ஷைத்தான், "எங்களுடைய இறைவா! நான் இவர்களை வழி கெடுக்கவில்லை. அவர்களே தூரமான வழிகேட்டிலிருந்தனர்" என்று கூறுவான். (ஸூரா - கா:ப்; பிரிவு: 2)

9. "நீங்கள் எனக்கு முன்னால் தர்க்கம் செய்யாதீர்கள். இதற்கு முன்பாகவே நான் எச்சரிக்கையை அனுப்பிவிட்டேன். என்னுடைய வார்த்தையில் எவ்வித மாற்றமுமில்லை. நிச்சயமாக நான் அடியார்களுக்கு அநீதமிழைப்பவனுமல்ல" என்று அல்லாஹ் கூறுவான். (ஸூரா - கா:ப்; பிரிவு: 2)

10. அந்நாளில் அல்லாஹ், நரகத்திடம் "நீ நிரம்பி விட்டாயா?" என்று கேட்பான். அதற்கு நரகம் "இன்னும் இருக்கிறார்களா?" என்று கேட்கும். (ஸூரா - கா:ப்; பிரிவு: 3)

11. அந்நாளில் பயபக்தியுடையோருக்கு சுவர்க்கத்தை தூரமின்றி அருகில் கொண்டு வரப்படும். "இது தான் உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சுவர்க்கமாகும். எப்பொழுதும் இறைவனையே நோக்குகின்றவர்களுக்கும், மறைவிலும் அர்ரஹ்மானை அஞ்சி நடப்பவர்களுக்கும் வாக்களிக்கப்பட்ட சுவர்க்கமாகும்" என்று கூறப்படும். (ஸூரா - கா.்ப்; பிரிவு: 3)

12. "சாந்தியுடன் நுழையுங்கள், இது நிரந்தரமான நாளாகும்" என்று அல்லாஹ் கூறுவான். அதிலே அவர்கள் விரும்பியதெல்லாம் அவர்களுக்கு கிடைக்கும். மேலும் அல்லாஹ்விடம், அதனைவிட அதிகம் உண்டு. (ஸூரா - கா.்ப்; பிரிவு: 3)

13. சூரிய உதயத்திற்கு முன்பும், அது மறைவதற்கு முன்பும் உனது இறைவனை துதிபாடுவீராக! இரவில், ஸஜ்தா செய்த பின்னரும் அவனைத் துதிபாடுவீராக! (ஸூரா - கா.்ப்; பிரிவு: 3)

**ஸூரா - 51, அத்தரியாத்; வசனம்: 1 - 30; பிரிவு: 1 - 2**

1. (இவ்வேதத்தைப் பற்றி) பொய் சொல்பவர்கள் அழிந்தே போவார்கள். அவர்கள் அறியாமையில் மூழ்கி, அலட்சியமாக இருக்கின்றனர். "கூலி கொடுக்கும் நாள் எப்போது வரும்?" என்று அவர்கள் கேட்கின்றனர். (ஸூரா - அத்தரியாத்; பிரிவு: 1)

2. அந்நாளில்தான் அவர்கள் நரகத்தில் வதைக்கப்படுவார்கள். "உங்களுடைய வேதனையைச் சுவைத்துப் பாருங்கள். எதற்கு நீங்கள் அவசரப்பட்டுக் கொண்டிருந்தீர்களோ, அதுதான் இது", என்று அவர்களிடம் கூறப்படும். (ஸூரா - அத்தரியாத்; பிரிவு: 1)

3. இப்ராஹீம் (அலை) அவர்களுடைய வீட்டில் விருந்தினர்கள் வந்தனர். இதற்கு முன்பு அறிமுகமில்லாத அவர்கள் வீட்டிற்கு வந்து, "உங்களுக்கு ஸலாம்!" என்று கூறினார்கள். அதற்கு இப்ராஹீம் (அலை), "உங்களுக்கும் ஸலாம்!" என்று பதிலுரைத்தார்கள். (ஸூரா - அத்தரியாத்; பிரிவு: 2)

4. இப்ராஹீம் (அலை) தம் வீட்டினுள் குடும்பத்தாரிடம் சென்று அவர்களுக்காக கொழுத்த, பொரித்த மாட்டிறைச்சியைக் கொண்டுவந்து அவர்கள் முன் வைத்து, "நீங்கள் சாப்பிட மாட்டீர்களா?" என்று கூறினார். (ஸூரா - அத்தரியாத்; பிரிவு: 2)

5. அந்த விருந்தினர்கள் அதனைச் சாப்பிடாததால் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு பயம் வந்தது. அப்போது அந்த விருந்தினர்கள், பிறக்கப்போகும் மகனைப் பற்றிய நற்செய்தி சொல்லவே வந்திருப்பதாக கூறினார்கள். (ஸூரா - அத்தரியாத்; பிரிவு: 2)

6. இதனைக் கேட்ட அவர் மனைவி முன்னால் வந்து, தன் முகத்தில் அடித்தவராக "நான் மலட்டுக் கிழவியாக இருக்கின்றேன்; எனக்கு எப்படி மகன் பிறப்பான்?" என்று கேட்டார்கள். "அது அப்படித்தான். உமது இறைவன் சொல்லி விட்டான். நிச்சயமாக அவன்தான் ஞானம் மிக்கவனாகவும், யாவற்றையும் அறிந்தவனாகவும் இருக்கின்றான்" என்று பதிலளித்தனர். (ஸூரா - அத்தரியாத்; பிரிவு: 2)

---------------------------------------------------------------------